**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, AVINASHI.**

Judicial form No.53
(See Rule 42)

## DEPOSITION OF WITNESS

**STC.No. 814/2023**

PW-1

| | | | |
|---|---|---|---|
| Name | சுந்தரி(PW1) | | |
| Husband's Name | சரவணன் | தொழில் | |
| Village | தோட்டத்துப்பாளையம் | | |
| Taluk | அவிநாசி | Age | **48** |
| District | திருப்பூர் | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 17th **day of August 2026** by Thiru. K. Kulanthaivel, Magistrate Clerk, JM Court, Avinashi by following the direction of Officer of this Court.

*(Accused Present)*

**முதல் விசாரணை:-**

நான் மேற்படி முகவரியில் குடியிருந்து கொண்டு கம்பெனியில் டெய்லராக வேலை செய்து வருகிறேன். கடந்த 04.08.2017 தேதி காலை 08.00-08.30 மணி அளவில் நான் இருசக்கர வாகனத்தில் தோட்டத்து பாளையத்தில் இருந்து அவிநாசி அரசு மருத்துவமனைக்கு வந்து கொண்டிருந்தபோது எனக்கு பின்னால் வந்த அரசு பேருந்து என் வாகனத்தின் மீது மோதியது நான் பறந்து சென்று கீழே விழுந்து விட்டேன். அரசு பேருந்தின் பதிவு எண் எனக்கு தற்போது ஞாபகம் இல்லை. திசை எனக்கு சரியாக தெரியாது. விபத்தில் எனக்கு வலது கையில் எலும்பு முறிவு ஏற்பட்டது. முட்டியில் ரத்த காயம் ஏற்பட்டது. சம்பவ இடத்திலிருந்து என்னை ஆம்புலன்ஸ் மூலம் அவிநாசி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள். அங்கு மருத்துவர் இல்லாத காரணத்தினால் எனக்கு வலி தாங்க முடியாததால் நான் அவிநாசி அரசு மருத்துவமனையில் இருந்து தீபா மருத்துவமனைக்கு சென்று அங்கு சிகிச்சை பெற்றேன். போலீசார் என்னிடம் மருத்துவமனையில் வைத்து புகார் வாக்குமூலம் பெற்றுக் கொண்டனர். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.பேருந்தை ஓட்டி வந்த நபரை நான் பார்க்கவில்லை.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

பேருந்து நிலைய நுழைவு வாயில் அருகில் தான் இந்த விபத்து நடந்தது

என்றால் சரிதான். விபத்து சமயத்தில் ஆட்டோ ஒன்று பேருந்து நிலையத்திலிருந்து வெளியே வந்தது என்றால் அதை நான் கவனிக்கவில்லை. பேருந்து பேருந்து நிலையத்தில் செல்வதற்காக வடக்கில் இருந்து தெற்கு நோக்கி பேருந்து நிலையத்திற்குள் செல்லும்போது நான் ஆட்டோ வருவதை கவனிக்காமல் பேருந்து முன் பகுதியில் சென்று மோதி விபத்தை ஏற்படுத்திக் கொண்டேன் என்றால் சரியல்ல. போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து விட்டார்கள். போலீசார் வந்து தான் என்னை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்களா என்றால் இல்லை. போலீசார் என்னை மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். சம்பவ இடத்தில் வைத்து போலீசார் என்னை விசாரிக்கவில்லை, நான் அடையாளமும் காண்பிக்கவில்லை. புகாரில் என்ன விபரம் உள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. புகாரில் நான் ஓட்டுனர் பெயர் தெரியாததால் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். விபத்து நடந்த இடத்தில் தார் ரோடு எவ்வளவு அகலம் இருக்கும் என்றால் எனக்கு தெரியாது. விபத்து நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு அருகில் புற காவல் நிலையம் உள்ளது என்றால் சரிதான். அதேபோல் அந்த இடத்தில் சிக்னல் உள்ளது. அந்த இடத்தில் வேகத்தடை உள்ளது. எனக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை. நஷ்ட ஈடு கோரி நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்லும் முறையிலும் விதத்திலும் சம்பவமே நடக்கவில்லை என்றும் விபத்துக்கு காரணம் பேருந்து இல்லை என்றும் நான் கவன குறைவாக சென்று இந்த விபத்தை ஏற்படுத்திக் கொண்டேன் என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்டதாக சொல்லக்கூடிய காயங்களுக்கும் இந்த பேருந்துத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நஷ்ட ஈடு பெறும் நோக்கத்தோடு நான்தான் அந்த விபத்துக்கு காரணம் என்பதை மறைத்து பொய் புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல .

**மறுவிசாரணைஇல்லை:**

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.<br><br>(Sd.) N.Keerthana<br>குற்றவியல் நீதித்துறை நடுவர், அவிநாசி. |